Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953. விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது தனிப்பிரதி விலை: சதம் 10

[புத்-எடு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஞு மாசிமீ கசூஉ வெள்ளிக்கிழமை (28 February. 1964) [ஆல-சஅ]

## சோபகிருதுவருஷசிவராத்திரி மாசி மாதம் 29-ம் திகதியே

சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் அவர்கள்

கொக்குவில் பிரம்மஸ்ரீ இ. சி. இரகுநாதையர் அவர்களது 'சோபகிருது வருட சிவராத்திரி விரத நிர்ணயம்'' என்ற வெளியீட்டைக் கண்டனம். அவர் அந்த வெளியீட்டில் கூறுவது:-

"மாக மாசமே கும்ப மாசமென்றால் கும்பமாசம் என்பது எப்பொழுதும் மாக மாசத்தையே குறிக்குமா?'' "மாசியில் (அதிகமாசம் வந்து) இரண்டு அமாவாசை முடிந்தால், முந்திய அமாவாசைக்கு முன்பே சிவராத்திரி அனுட்டிக்கற்பாலது. அப்பொழுது சிவராத்திரிக்கு 'அதிக மாச தோஷம் இருக்காது'' "மாசியிலே இரண்டு அமாவாசை முடிந்தால் மாசிமாதம் அதிக பாற்குனமாகிவிடும். அப்படி வந்தால் அதிக மாசத்தில் சிவராத்திரி கொள்ளாமல் பங்குனிமீ 28உ தான் சிவராத்திரி கொள்ளுவதா? அல்லது சிவராத்திரிக்கு மட்டும் அதிகமாசதோஷம் இல்லையென்று விதியிருக்கிறதா? என்றித்தியாதிகள்.

ஸ்ரீமத் இ. சி. இ. ஐயரவர்கள் விளக்கியிருப்பதும், அவர் வினவிய வினக்களும் உண்மைப் பொருள் பயப்பனவா என்பதை அவரும் அவருடைய முன்னோருங் கணித்த பஞ்சாங்கங்களைக் கொண்டே ஆராய்வாம்.

ஸ்ரீமத் ஐயரவர்கள் தமது தாரண (1944—45) வருஷப் பஞ்சாங்கத்தில்,

"மாசி 1திகதி, திங்கள் (12-2-45) அமாவாசை இரவு மணி 11.33.

மாசி 2 (13-2-45) பாற்குன சுத்தம்.

மாசி 29 (12-3-45) மகாசிவ ராத்திரி.

மாசி30 (13-3-45) அமாவாசை''

என்று கணித்துள்ளார் மேலும் தைமாத அடிக்குறிப்பில், தைமீ 29உ ஞாயிற்றுக்கிழமை சாந்திரமானிகள் சிவராத்திரி விரதங் கொள்வர்'' என்று வரைந்திருக்கின்றார்,

இத்தாரண வருஷத்தில் தை (மகர) மாசத்தில் மாகமும் மாசி (கும்ப) மாசத்தில் பாற்குனமும் வந்திருக்கின்றன. நிகழும் சோபகிருது வருஷத்திலும் அவ்வாறே தைமாசத்தில் மாக மாசமும் மாசியிற் பாற்குனமும் வந்திருக்கின்றன.

தாரண வருஷப் பஞ்சாங்கத்தில் "தைமீ 29உ ஞாயிற்றுக்கிழமை சாந்திரமானிகள் மகாசிவராத்திரி விரதங்கொள்வர் என்று அடிக்குறிப்பில் வரைந்து சாந்திரமாகத்தை (தைமாசத்தை) யொதுக்கிவிட்டு, மாசிமீ 9ந் திகதியிலன்றே மகா சிவராத்திரி விரதம் என்று நிச்சயித்தனர். அங்ஙனம் அவர் மாசியில் நிச்சயித்தவாறே எல்லா ஆலயங்களிலும் சிவராத்திரி நடைபெற்றது. ஆனால் நிகழும் சோபகிருது வருஷத்தில் மாசி மீ 29ந் திகதி சிவராத்திரியைக் குறிப்பிடாமல் ஒதுக்கிவிட்டு முன்னர்த் தாம் நிச்சயித்ததற்கு விரோதமுற சாந்திர மகா மாசத்தைத் தழுவிக் கொண்டனர்.

இந்த ஐயரவர்கள் தாரண வருஷத்தில் நிர்ணயித்ததையே சுருகுல வெளியீடுகளும் தைமாசத்தில் வரும் மாக மாசத்திற் செய்தல் கூடாது என்றும், கும்ப மாசத்திற் செய்தலே தக்கதென்றும் பிரமாணத்துடன் விளக்குகின்றன. புதிதாகச் சொன்னாற்றான் ஆக்ஷேபம் வேண்டும்.

இனி, அதற்கு முந்திய குரோதன (1925—1926)

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

### நற்சிந்தனை

காமமுத லாறுங் களைந்த
பெரியோரே
சேமமுடன் வாழ்வார்
சிறந்து.

## இலங்கை வானொலியில்

### திருவள்ளுவர் திருநாள்

செந்தமிழ் உய்யவும், சைவநெறி தழைத்தோங்கவும் அவதாரம் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் கோட்பாடுகளுக்கமைய, இலங்கை வானொலி திருவள்ளுவர் திருநாளை வழக்கம்போல் மாசி உத்தர தினத்தில் 29-2-64 ல் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளது அன்று காலை 7-45—8-15 வரை திருவள்ளுவரையும், திருக்குறளையும் பற்றிய பாட்டுக்களையும் ஒலிபரப்பும். அன்றிரவு 9-15 க்கு மதுரையைச் சேர்ந்த திருமதி இராதா தியாகராசன் அவர்கள் திருவள்ளுவரைப்பற்றி ஓர் பேச்சை ஒலிபரப்புவார்கள். திருவள்ளுவர் திருநாளையொட்டி இவ்வாரத்தில் சிறுவர்நிகழ்ச்சிகளிலும், கிராம நிகழ்ச்சியிலும் கருத்துரைகள் ஒலிபரப்பாகும்.

அகில இந்திய வானொலி நிலயத்தைச் சேர்ந்த திரு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## வள்ளுவர் பெருமானின் திருநாளைக்கொண்டாடுக



சைவ சித்தாந்தத்தையே உட்கிடக்கையாகப்பெய்து, அம்முதல் னவ்வீறாய நந்தமிழ் மொழியில் அம்முறையே —

"அகர முதல
எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

என்றெடுத்து,

'ஊடுதல் காமத்திற் கின்ப
மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்''

என முடித்து,

உலக முதல்வனாகிய "ஆதி பகவனைக் கூடி முயங்குதலே பேரின்பம்'' என முடிந்த முடிபாகக் குறிப்பானுணரவைத்த ஒப்பற்ற பெருமை திருவள்ளுவ நாயனாருக்கே உரித்து. அப்புலவர் சிகாமணியை உலகெலாம் போற்றிப் பரவுதற்குரிய தினம் மாசி உத்தரம்; இது பொய்யறியா மெய்ந்நாவலர் குறித்தத்த தினம். இவ்வருடம் '29-2-64' ல் வருகின்ற தினம்; [illegible] கொண்டாட வேண்டிய [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "உள்ளங் கவர் கள்வன்"

ஒருவருக்கு உரிய பண்டத்தை, அவர் அறியாமலே கவர்ந்துகொள்ளும் செயலுக்கு களவு என்று பெயர்.

அந்தக் களவினால் வரும் பயன்: தீமையானால் அது பஞ்சமாபாதகங்களுள் ஒன்றாகவும், நன்மையானால் புண்ணியங்களுள் ஒன்றாகவும் கருதப்படும். ஆதலால், களவுகள் எல்லாம் (தீமை பயக்கும்) களவுகளுமல்ல; கள்வரெல்லாம் (தீமையே செய்யும்) கள்வருமல்லர்.

இதனை இறையனார் களவியலுரை மேல்வருமாறு குறிப்பிடுகின்றது:-

"களவு, கொலை காமம், இணை விழைச்சு என்பன வன்றோ சமயத்தாரானும் உலகத்தாரானும் கடியப்பட்டன; அவற்றுள் ஒன்றாலோ, இதுவெனின், அற்றன்று, களவு என்னுஞ் சொற்கேட்டுக் களவு தீதென்பதூஉம், காமம் என்னுஞ் சொற்கேட்டுக் காமம் தீதென்பதூஉம் அன்று; மற்று அவை நல்ல ஆமாறும் உண்டு; என்னை, ஒரு பெண்டாட்டி தமரொடு கலாய்த்து நஞ்சுண்டு சாவல் என்னும் உள்ளத்தளாய நஞ்சு கூட்டி வைத்து, விலக்குவாரை இல்லாத போழ்து உண்பல் என்று நின்றவிடத்து; அருளுடையான் ஒருவன் அதனைக் கண்டு, இவள் இதனை உண்டு சாவாமற் கொண்டு போய் உகுப்பல் என்று, அவளைககாணாமே கொண்டு

### "அருட் செல்வன்"

போய் உகுத்திட்டான் அவளும் சன நீக்கத்துக் கண் நஞ்சுண்டு சாவான் சென்றாள்; அது காணாளாய்ச் சாக்காடு நீங்கினாள். அவன் அக்களவினான் அவளை உய்யக் கொண்டமையின் நல்லூழிற் செல்லும் என்பது மற்றும் இது போல்வன களவாகா, நன்மை பயக்கும் என்பது''

இனி, உலகத்தில் உள்ள பொருள்களுள் பஞ்சபூதங்களினால் ஆக்கப்பட்டனவெல்லாம் தோன்றிநின்று அழிவன, நிலையில்லாதன; அவையொழிந்த உயிர்களெல்லாம் அழிவற்றன; நிலைபேறுடையன நிலையற்ற பொருள்களைக் கவருதல் சாதாரண களவின்பாற்படும். ஆனால் நிலைபேறுடைய பொருளாகிய உள்ளத்தை — உயிரைக் களவு செய்வது சாதாரணமானதன்று. அது பெருங்களவு; பச்சைக் களவு. அதைச் செய்பவன் பெருங்கள்வன் — பச்சைக் கள்வன் ஆவன்.

உள்ளத்தை — அதனின் வேறுபாடில்லாத உயிரைக் களவு செய்பவன் அந்த உள்ளத்தின் - உயிரின் நன்மைக்கு அதனைச் செய்வானாயின் அவன் என்றும் நிலைபேறுடைய பேரருளைச் செய்த பெரும் புண்ணியனாவன்.

அப்புண்ணியனுக்குத் தன் உள்ளத்தை-தன்னைக் களவு கொடுத்த ஒரு உயிர், பிறகு அவனின் வேறாய் இருக்க விரும்பாது. அது:- 'புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரந்தர வேண்டும்'' என்று எப்பொழுதும் இடைவிடாது வழுத்திக்கொண்டே இருக்கும்; அவனே தானேயாக விருக்க விரும்பும். அதனால், நிலைபேறுடைய பேரின்ப வாழ்வு ஆகிய பெரும்பேறெய்தும்.

இத்தகைய களவும் இதனால் வரும் பயனும் பெற்றதொரு குழந்தை, பச்சைக் குழந்தை, பால்மணம் மாறாத குழந்தை அன்றொரு நாள் இந்தச் செந்தமிழ நாட்டில் இருந்தது; அந்தக் குழந்தை தோடுடைய செவியனை "உள்ளங் கவர்கள்வன்' என்று பாடிய குழந்தை, திருஞானசம்பந்தக்குழந்தை.

சிவன் என்ற பச்சைக் கள்வன், அக்குழந்தையின் தந்தை, தாய், தமர், பிறர் யாரும் அறியாமலே அதன் உள்ளத்தை — நிலைபேறுடைய அந்தப் பண்டத்தைக் கவர்ந்து கொண்டான்; அதன் பிறகு, அந்தக் குழந்தை அச்சிவனின் ஞானமாகிய எண்ணத்தின் படியே அதற்கு ஆட்பட்டு நடக்கத் தொடங்கிவிட்டது.

சிவன்: உண்மை, அழகு, நன்மை, இன்பம் உடையவன்; ஆதலால் இத்தகைய நல்லியல்புகளுக்கு மாறுபடாத (ஆனம), நாயகனாகிய அவன், (நாயகியாகிய) திருஞானசம்பந்தரைக் களவு

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## திருக்குறள் மகாநாடு

மல்லாகம் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில் மாசித் திங்கள் 17-ம் நாளும் (29.2-64) 18-ம்நாளும் (1-3-64) மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் திருக்குறள் மாகா நாடு நடைபெறும்.

முதல்நாள் திரு. சு. நடேசன் அவர்களின் தலைமையில் நடை

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சோபகிருது ஷு மாசிமீ
கசுஉ வெள்ளிக்கிழமை

## நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை

I

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள சைவ சமயத்துக்கும் தமிழுக்கும் செய்த சிறந்த தொண்டுகளுள் வித்தியாசாலைத் தாபனமும் ஒன்ருகும. "தாம் கற்ற காலத்தில் அனுபவித்த கஷ்டங்கள் எப்போதுப் அவருடைய மனசிலே நிலையாயிருந்தமையால் பல விடங்களிலும பள்ளிக்கூடங்கள் வைத்துப் பிள்ளைகளிடம் சம்பளம் வாங்காமற் படிப்பிக்க வேண்டுமென்கின்ற ஆசை முறுகி வளர்ந்து வந்தது. அதனை தமக்கு இருபத்காருவது வயசு நடககிற காலமாகிய 1848 ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் வண்ணுர்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயர் கொடுத்து ஒரு வித்தியாசாலை ஸ்தாபித்தார்".

இவ் வித்தியாசாலையைத் தான் திரு. ஈ. எம. வி. நாகநாதன், நல்லூர்ப்பாராளுமன்ற உறுப்பினர் மூடுவிப்பதற்கு முயற்சி செய்கிருர்.

இவ் வித்தியாசாலையை நாவலர்பெருமான் எப்படிக் கட்டுவித்தார். "அக்காலத்தில் இவருடைய கையிற் பணமில்லாமையாற் பிடியரிசி தண்டிச் சேர்க்கும் பொருள் கொடுத்துத்தம்மிடத்தேமுன் கற்ற சதாசிவபிள்ளை முதலானவர்களை உபாத்தியாயர்களாக நியமித்து, ஒருவாறு நடத்தி வந்தார் இப்படிப்பட்ட சமயத்திலே ஒரு வர்த்தகசாலை விலைக்கு வாங்கத் தக்கதாக வந்தது. அதனை வித்தியாசாலைக்காக வாங்க விரும்பியும் போதிய பணம் கையில் இல்லாமையால் மனம் வருந்திக் கொண்டிருக்குங் காலத்தில் ஒருநாள் பூசையிலே தமது உடையவரை நோக்கி அழுது ஒரு செய்யுள் சொன்னுர். அதன் ஒரு பகுதி வருமாறு:—

"கணிகொண்ட வித்தியாசாலை தாபித்திவ்வூர்க்கயவா செயுமிடர்கள் கண்டுங், கல்லூரியதை நடாத்தப் பொருட்டுனை செயக் கருதுவோரின்மை கண்டும், அணிகொண்ட சாலைய தொழிப் பினஃதுனையிகழு மங்கிய மதத்தர் சாலையாமெனநினைந்தெ னெஞ்சுறப கற்றயருற லறிந்து மொரு சிறிது மருளாத், தினிகொண்ட நெஞ்சவினி நின் முன் யான் உயிர் விடுத றிண்ண நீ யறியாததோ." என்பது

"இப்படியாக அழுது புலம்பின அன்றே கொழும்பிலுள்ள பிரபுக்களினுள்ளே, ஔதாரிய குணத்திற் சிறப்புற்ருேங்கிய இ. நன்னித்தம்பி முதலியார் என்பவர் இவ் வித்தியாசாலைக்காக ௬00 ரூபா அனுப்பியிருந்தார் அந்தப் பணத்தை மூலமாக வைத்துக்கொண்டு அந்த வர்த்தகசாலையை வாங்கினுர்."

இங்கு அநுவாதக்குறிக் கீழ் இருக்கும பந்திகளெல்லாம் நாவலர் பெருமானின் தமையனுரின் மகன் திரு. க. கயிலாசபிள்ளை அவர்களால் எழுதப்பட்ட நாவலர் சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்டன. இப்பந்திகள் மூலம் நாவலர் பெருமான் இப்பாடசாலையைக கட்டுவதற்குப்பட்ட கஷ்டத்தையும, இதற்குத் தேவைபான பொருள் வந்த வழியையம் நன்கு அறியலாம்

இப்பாடசாலை மூட நேர்ந்தால தாம் உயிர்விடுவது நிண்ணம் என்று கலங்கி பழுதார் நாவலர் பெருமான். அன்றே பொருளுங் கிடைத்தது.

இன்று கலங்கி அழுவார் யார்? இருக்க, இபபாடசாலையை நடத்தும் உரிமை யாருக்குரியது? சொத்து யாருக்குரியது? திருவாளர் க. கயிலாசபிள்ளை அவர்களே சந்தேக விபரீதமற நொத்தாரிசு மூகதாவில் இதனை விளக்கியிருக்கிருர் 10-61-ம் இலக்கத் தத்துவ நியமன உறுதியில் விளக்கம் விரிவாகக்கிடைக்கிறது சில பகுதி பின்வருமாறு.-

"யாழ்ப்பாணம் வண்ணுர்பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலைத் தாபகரும் அதிபதியும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தாம 1872-ஆம ஆண்டு மாசி மாசம் 17ஆம தேதி 19ஆம இலக்கத்தில் நொத்தாரிஸ் கா. சின்னக்குட்டி முன்னிலையிலும், 1874 ஆம் ஆண்டு ஆனி மாசம் 6 ஆம் தேதி 67ஆம இலக்கத்தில் நொத்தாரிஸ் சு கந்தப்பசேகரர் முன்னிலையிலும், 1871 ஆம் ஆண்டு ஆடி மாசம் 29 ஆம் தேதி 70 ஆம் இலக்கத்தில் நொத்தாரிஸ் க. விசுவநாதன் முன்னிலையிலும் எழுதுவித்த உறுதிகளின தமக்குப் பின் இவ் வித்தியாசாலைத் தருமத்தையும் அதைச் சேர்ந்த தருமங்களையும் தம்முடைய சீட பரம்பரையிலுள்ளவர்களே நடத்திவரல் வேண்டுமென்று எழுதுவித்திருக்கிறபடியாலும்;"

"மேற்படி நாவலரவர்கள் சிவபதம் அடைந்தபின் அதன்படியே அவர்களுடைய சீடராகிய ந. க சதாசிவப்பிள்ளை 31 வருடகாலம் இவ் வித்தியாசாலையையும் இந்தியாவில் சிதம்பரத்திலே மேற்படி நாவலரவர்களால் தாபிக்கப்பட்ட வித்தியாசாலையையும நடத்திவருகிறபடியாலும்;"

"மேற்படி நாவலரவர்களுடைய உரிமைக்காரர் சகலரும் தாங்கள் இவ் வித்தியாசாலைத் தருமங்களை நடத்த முயற்சிசெய்யாமல் அந்தச் சதாசிவப்பிள்ளையையே பராபரிப்புக்காரனுகக் கண்டு நொத்தாரிஸ் மு. கந்தசாமி முன்னிலையின் 1879ஆம் ஆண்டு மார்கழி மாசம் 29ஆம் தேதியிலும், 1880ஆம் ஆண்டு பங்குனி மாசம் 11 ஆம தேதியிலும் 18ஆம தேதியிலும் முறையே 1608, 1678, 1683 ஆம இலக்கங்களில் தொடரா முறிகள் எழுதிக் கொடுத்திருக்கிறபடியாலும்;"

"மேற்படி நாவலரவர்களுடைய ஆதனத்துககு உரிமைத தத்துவம் பெற்ற தத்துவக்காரர் இவ்வித்தியாசாலைக்குரிய கிட்டங்கி வாடகை அறவிடும் பொருட்டு யாழ்ப்பாணம் றெக்குவெஸ்துக் கோட்டில் 10934 ஆம் இலக்கத்தில் வழக்கு வைத்தபோது உரிமைத் தத்துவக்காரருக்கு இவ் வித்தியாசாலையை நடத்தும் அதிகாரம் இல்லையென்று கோடு தீர்த்திருக்கிறபடியாலும்;"

இப்பாடசாலையும் இதற்குரிய தர்மச் சொத்துக்களும் சீட பரம்பரைக்கே உரியனவாகும் இவைகளுக்கும சொந்தக்காரருக்கும் ஓர் உரிமையம் இல்லையென்பதை அரசாங்கம உணர்ந்த, நாவலர் அவர்கள் இலட்சியங்களை நிறைவேற்றும் நோக்கமாக, இப் பள்ளிக்கூடத்திற்கு மாத்திரம ஓர் தர்ம கர்த்தா சபையை ஏற்படுத்தியிருககிறது.

இச்சபையில் நாவலர் அவர்கள் மாணவ பரம்பரையில் வந்த பெரியோர்கள் அங்கத்துவம் வகிக்கிருர்கள். அவர்களில ஒருவர், சைவசாத்திரப் பேரறிஞரும், ஆகமவிற்பன்னரும சிவானந்த குருகுலத்தின் அதிபருமாகிய சிவஸ்ரீ. ச குமாரசுவாமிக்குருகள. மற்றவர் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறிந்தவரும் தலைசிறந்த தமிழ் அறிஞருமாகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள. மற்றவர்களும் நாவலர் சீட பரம்பரையோடு நெருங்கிய தொடர்புடைய வராவர். எனவே, இப்பொழுது இருக்கும நாவலர் தர்ம கர்த்தா சபையை நியமித்த இந்த அரசாங்கத்திற்குச் சைவமக்கள் என்றுங்கடப்பாடுடையர்.

---

# வள்ளுவர் காட்டும் அறநெறியொழுக்கம்

—————0—————

சைவப்புலவர். திரு. வ. கந்தசாமி அவர்கள்

நாவலர் ஐயா அவர்களின் கருத்துப்படி 'வள்ளுவர் தினம்'' மாசி உத்திரத்தில் கொண்டாடத்தக்கது. அத்தினம் மாசி கஎ-ம் திகதி (29-2-64) ஆதலின், அதனையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.

(முற்றொடர் -2)

**நன்றி செய்தாரை என்றும் மறவேல்**

நாம் உதவியொன்றும் செய்யாமலிருக்க, நமக்குத் தக்க சமயத்தில் ஒருவன உதவினுல், அவ்வுதவிக்கு உலகையும் - வானத்தையும் கொடுத்தாற்கூட ஈடாகாது.

"செய்யாமற் செய்த
வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது"

வேண்டிய காலத்து எதிர்பாராது செய்த உதவி உலகினும் மிகப்பெரிது.

"காலத்தினுற் செய்த
நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

தனக்கு ஏற்பட்ட துன்பத்தைத் துடைத்தவர் நட்டை எழுபிறப்பிலும் நன்றியுடன் நினைப்பர் எவ்வளவு தீமை செய்தாலும், ஒருவர் செய்த நன்றியை நினைக்க வேண்டும். நன்றிமறவேல. தீமையை உடனே மறக்க வேண்டும்.

'நன்றி மறப்பது
நன்றன்று: நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று."

செய்ந்நன்றி கொன்ற மனிதனுக்கு ஒருகாலத்தும் உய்வில்லை; என்பதனை,

"எந்நன்றி கொன்ருர்க்கும்
உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்று வள்ளுவர் மிக நயமாக எடுத்துக்கூறியுள்ளார்.

கேடு இல்லாமல் வாழ வேண்டுமானுல்; சந்ததி வழங்க வேண்டுமானுல், வஞ்சனையை ஒழித்து நடுவு நிலைமைப்படி நடக்க வேண்டும்.

'சமன்செய்து சீர்தூக்கும்
கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்ருேர்க்கணி''

நடுவு நிலைமையான செல்வம்சிதையாது சந்ததிகளுக்கு உறுதியாகவிநக்கும. மக்களைப் பார்த்தால், அவரவர், பெற்ருர் தக்கவர், தகாதவர் என்பது தெரியும். நடுவு நிலைமையாளருக்கு நல்ல சந்ததி எய்தும்.

"தக்கார் தகவில
ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப்படும்"

வாணிகத்திலும் நடுவு நிலைமையைக் காக்க வேண்டும். தனக்கு ஊதியம் கருதுவதுபோலப் பிறர்க்கும் நல்ல பொருள்களைத் தரவேண்டும். தன்னலம் போலப் பிறர் நலமும் கருதும் வாணிகனுக்கு நல்ல வியாபாரமாகும்

'வாணிகஞ் செய்வார்க்கு
வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்''

இவ்வாறு நடுவுநிலைமையை மேற்கொணடு நடப்பதே பகுததறிவுடைய மக்களின் கடமையாகும்.

**சான்ருேர் எனவே
தக்கார் சொல வாழ்**

ஒவ்வொரு நாளும் சிறுமை போக்கிப் பெருங்குணமே மேலோனுக வேண்டும் குணமே சான்ருேர் நலம். அன்பு — நாண் — ஒப்புரவு — கண்ணேட்டம் — வாய்மை —

"அன்புநாண் ஒப்புரவு
கண்ணேட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பூன்றிய தூண்"

இவ்வைந்தும் சான்ருண்மை என்னும் மாளிகையைத் தாங்கும் ஐந்து தூண்களாகும்,

சான்ருேர் வறியவராயினும் இழிவன்று. உலகில் வரும் எத்தகைத் துன்பத்திற்கும் சான்ருேர் அஞ்சார். ஊழி பெயர்ந்தாலும் தமது ஒழுக்கத்திற் சிதையாதவர் சான்ருண் மைக்குச்சமுத்திரராவர்.

"ஊழிபெயரினுந் தாம்பெயரார்
சான்ருண்மைக்கு
ஆதியெனப் படுவார்",

ஆகவே வள்ளுவர் காட்டிய அறநெறி ஒழுக்கங்களை மேற்கொண்டு வாழ்ந்து பயனடைவோமாக. இதுவே நாம் வள்ளுவருக்குச் செய்யும் மரியாதையுமாகும். வெறும் விழாக்கள் பல கொண்டாடினுல் மட்டும் போதாது. சொல்லளவில் மாத்திரம் நின்றுவிடாது இயன்றவரை செயலளவில் காட்டுவதே மிக மேலானது. வள்ளுவர் தந்த திருமறையைப் போற்றிப் படிப்போமாக.

---

## சோபகிருதுவருஷ சிவராத்திரி மாசி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வருஷ இரகுநாதையர் பஞ்சாங்கத்தில்,

"மாசி 1 திகதி (12-2-26) அமாவாசை.
மாசி 2 திகதி (13-2-26) பாற்குன சுத்தம்.
மாசி 29 திகதி (12-3-26) மகாசிவராத்திரி.
மாசி 30 திகதி (13-3-26) அமாவாசை''

என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அக்குரோதன வருஷத்திதிலும் தைமாசத்தில் வரப்பெற்ற மாககிருஷ்ண சதுர்த்தசியில் குறிப்பிடாது மாசிமீ 29 ந் திகதியிலேயே சிவராத்திரி குறிக்கப்பெறறிருப்பதை மேற்காட்டிய நிர்ணயத்தால் அறியலாம்.

இனி, அதற்கு முந்திய பராபவ(1906—1097) வருஷ இரகுநாதையர் பஞ்சாங்கத்தில்,

"மாசி 1 திகதி செவ்வாய்க்கிழமை (12-2-1097) அமாவாசை,
மாசி 2 திகதி புதன்கிழமை (13-2-1907) பாற்குனசுத்தம்.
மாசி 29 திகதி (12-3-1907) மகா சிவராத்திரி
மாசி 30 திகதி (13-3-1907) சது 16. அமாவாசை"

என்று நிர்ணயங் காணப்படுகின்றது இவ் வருஷத்திலும் தையில் குறிப்பிடாது கும்பமாசத்தில் சிவராத்திரி நிர்ணயித்திருப்பதை மேற்காட்டிய நிர்ணயத்தால் அறியலாம்.

இன்னும் அதற்கு முந்திய சர்வசித்து (1887 — 1888) வருஷத்திலும் இரகுநாதையர் பஞ்சாங்கத்தில்,

"மாசி 1உ சனி அமாவாசை
மாசி 2உ ஞா. பாற்குனசுத்தம்
மாசி 29உ ச. மஹாசிவராத்திரி விரதம்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோபகிருது வருஷ மகாசிவராத்திரி மாசி

2-ம் பக்கத் தொடர்ச்சி

மாசி 30உ ஞா. சது கூசா அமாவாசை" என்று கணிக்கப்பட்டிருக்கிறது.

அந்தச் சர்வசித்து வருஷத்திலும் தையில் வந்த சாந்திர மாகமாசத்தில் நிர்ணயஞ் செய்யாது, மாசி (கும்ப)மாத பாற்குனத்தில் சிவராத்திரி புண்ணிய காலம் நிச்சயிக்கப்பட்டிருப்பது காண்க.

இச்சோபகிருது வருஷம் போலவே பத்தொன்பது வருஷங்களுக்கொருமுறை நிகழப்பெற்ற முந்திய தாரண வருஷத்திலும் அதற்கு முந்திய வருஷங்களிலும் இவருடைய பஞ்சாங்கங்களில் சாந்திர பக்ஷமாகத் தைமாசத்தில் ஒருபோதும் சிவராத்திரி விரதம் நிர்ணயிக்கப்பட்டதேயில்லை.

அக்காலத்தில் இவர்கள், சைத்திரம், யாகம, பாற்குனம் என்னும் சப்தங்கள் சாந்திரம் சௌரம என்னும் இருமான மாசங்களுக்கும் ஆகமங்களில் உதகரிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், மாகமாசம என்பது (சௌர) கும்ப மாசத்துக்கும் இடம் நோக்கிவரும் என்பதையும், சிவராத்திரி சௌரமாசத்தில் அனுட்டிக்கப்படும் விரதம் தான என்பதையும், சௌர மாச முறைப்படி கொள்ளும் சிவராத்திரிக்கு அதிக மாச தோஷம் இல்லை என்பதையும், அச்சிவநிசி சாந்திரமாக மாசத்திலேயன்றிச் சாந்திர பாற்குனத்திலும் வருமென்பதையும் ஒப்புக்கொண்டிருந்தார்கள் என்பதை இவர்கள் முன் நிர்ணயித்த நிர்ணயங்களே துலக்கிக்காட்டுகின்றன. இந்த வருஷத்தில்தான் சாந்திர பக்ஷமாகச் சிவராத்திரியை நிர்ணயித்ததும் பத்திரிகைகளில் எழுதியும் வருகிறார்

சிவாகம வாக்கியங்கள் தம்முள் முரணுவனபோல நமது சிற்றறிவுக்குத் தோன்றின, அவற்றை ஆராய்ந்து பொருளொற்றுமைகண்டு எடுந்துக்கொண்ட விஷயத்தைத் தாபிப்பதே மரபு. அவ்வாறு பொருளொற்றுமை காணுதலின்றி, ஒன்றனையே பற்றுக்கொண்டு ஏனைய வாக்கியங்களை அபத்தமான விதிகளென்று நிந்திப்பது பொருள் கொள்ளும் முறையாகாது; சிவாகம தூஷணமாகிய மாபாதகச் செயலுமாம்.

இனி, எந்தக்கர்மாவை எந்தமானத்தில், எந்தக்காலத்தில் நடத்தவேண்டுமெனச் சுருதிகள் விதிக்கின்றனவோ, அந்தக்கர்மாவை அந்தமானத்தில், அந்தக்காலத்திலேயே நடத்த வேண்டும். போலி யுக்தி வாதங்கள் பிரயோசனப்படுவன அல்ல

ஆகையால் சிவராத்திரி பூசை விரதங்கள் சோபகிருது வருஷம் மாசிமீ 29-ந் திகதியே அனுட்டிக்கப் பெறுதல் வேண்டுமென்பது நிச்சயமாகின்றது.

சைவநெறியொழுகும் அனைவரும் இவற்றை அவதானிப்பார்களாக.

— —

## மாணவர் பகுதி இடமின்மையால் வெளிவரவில்லை

---

# திருவள்ளுவர் குருபூசை

:0:

திருவருளை முன்னிட்டு நிகழும் சோபகிருது ௵ மாசி 17உ (29—2—64) சனிக்கிழமை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில், சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருவள்ளுவர் குருபூசை நடாத்தப்படும்.

**நிகழ்ச்சிகள்:**

மு. ப 9 — பி. ப. 1.

சிவபூஜா மண்டபத்தில் சிவபூசை, கடவுளாராதனை, திருவள்ளுவர் மாலையோதல், மாகேசுரபூசை,

**விரிவுரைக் கூட்டம்:**

இரவு: 6-30 மணி ஆரம்பம்

தலைவர்: திரு த முத்துச்சுவாமிப்பிள்ளை அவர்கள் (சைவ பரிபாலன சபைத்தலைவர்)

1. தலைவர் முன்னுரை
2. 'திருவள்ளுவர்" திருவளர் செல்வி, லீலாவதி தாமோதரம்பிள்ளை (யாழ். இந்து மகளிர்கல்லூரி மாணவி)
3. வள்ளுவர் கண்ட அரசியல் திரு. செ. கணேசமூர்த்தி அவர்கள் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி உதவியாசிரியர்)
4. வள்ளுவரும் சமயமும் திரு. மு. வைத்தியலிங்கம் அவர்கள் (காரியதரிசி- சைவாசிரியர் சங்கம்)
5. 'குறளும காவியங்களும்' வித்துவான். பண்டிதர். திரு. க. கி. நடராஜன் B.O.L,
6. நன்றிகூறல்.

சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம் 25-2-64,

மு. மயில்வாகனம், சமயப்பிரசார அமைச்சர்

---

இவ்வாரம் 1-3-64 — 7-3-64

# உங்கள் பலன் ?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

எதிரிகளை வெல்வீர். புதுமுயற்சிகளில் வெற்றியும் உண்டாம். புதன்மாலை வியாழன் வெள்ளி எச்சரிக்கை. இறுதிப் பகுதி சார்புள்ளதாகும்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

வாகனங்களால் இலாபம் நிச்சயம். விவசாய வெற்றியும் உண்டாம். எதிரிகளையும் வசமாக்குவீர். இறுதிநாள் எச்சரிக்கை.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2, 3ம் பாதம்.

நன்மாற்றம் நிச்சயம். ஆரம்பத் தோல்வியால் துவண்டுவிட வேண்டாம். பணத் தொல்லை தீரும். உடல்நிலை திருந்தவேண்டும்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

சுகவீனம் உண்டாம். குடும்பநிலைமை திருப்தியாயிருக்காது பெருஞ் செலவுகள் ஏற்படும், இரகசிய எதிரிகள்பற்றி எச்சரிக்கை,

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

பணமளவில் நல்ல வாரம் புது முயற்சிகளில் வெற்றி நிச்சயம். குடும்பநிலை திருப்தியற்றிருக்கும். சுகவீனமும் உண்டாம்.

கன்னிராசி உத்தரம் 2, 3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இனத்தவர்மூலமான தொல்லைகளுண்டாம். எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம். பணமளவில் நல்ல வாரம்.

துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

சில கண்டனங்களும், இரகசிய எதிரிகளின் தொல்லையும், செலவதிகரிப்பும் நிம்மதியீனமும் உண்டாம்,

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

வழக்குத்தொல்லைக்கிடமுண்டு. சுகவீனமுண்டாம். நண்பர்கள் தொல்லைக்குள் உம்மை மாட்டுவர். தொழில் வெற்றியுண்டாம்

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

சில நன்மாற்றங்களுக்கு இடமுண்டு. போட்டியாளரை வெல்லுதல் கைகூடும். நிலபுல இலாபம் நிச்சயம், நிம்மதியிருக்காது.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

சுகவீனம், சொந்த விவகாரத்தில் எதிர்ப்புக்கள் உண்டாம், சிறு பண இலாபம் நிச்சயம்,

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

உடல்நிலை திருப்தியாயிருக்காது. கண்டனங்களுக்கிலக்காவீர், பண இலாபம் நிச்சயம். குடும்ப நிலை அமைதியாகும்,

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

பெரும் எதிர்ப்புகள் உமது விவகாரங்களில் உண்டாகும். நண்பர்களுடன் சண்டைக்கிடமுண்டு. உடல்நிலை பூரணமாக [illegible]

---

### கோட்டு விற்னவு விளம்பரம்

யாழ்ப்பாணம், நல்லூர்

கார்த்திகேசு இரததினசபாபதி —வழக்காளி

இல. M.B. 4817

எதிராக

தின்னவேலி கிழக்கு

1. பொன்னையா கார்த்திகேசுவும் பெண்
2. நல்லம்மாவும்

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4817-ம் இலகக வழககில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னுல் விபரிககப்படும் ஒரு துண்டுக்காணியை 1964-ம் ௵ சித்திரைமீ 11உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 3582-ம். 21-5-62 தொடக்கம் 18-12-62 வரைககும் ரூபாய் 2500-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 223-70 சதமும் செலவில் ரூபா 125 கொடுபட்டிருககிறது.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோயிற்பற்று தின்னவேலி இறை "தில்லைநாதன் வளவும் சுந்தரம் வளவும்" பர, நில. இலா 6-ம் குளி 7½ யும். கல்வீடும், கிணறும், பயிர்வகைகளும். இதற்கு எல்லை கிழககு ஒழுங்கை முகப்பும். அருணாசலம் பெண் ஆசைமுத்துவுக்கும, பங்காளருக்கும் உரிய ஆதனம். வடககு சரவணமுத்துவுககும், சகோதரத்துக்கும் உரிய ஆதனம். மேற்கு சின்னட்டி நடராசாவின் ஆதனம். தெற்கு கை ஒழுங்கையும், பெரிய ஒழுங்கையும், இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும் இவ்வாதனம் யாழ்ப்பாணம் காணிப்பதிவு கந்தோரில் D 238/222-ம் இலககத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அ. ஜெகநாதன்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
16A, அம்மன் வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
M 300 28-2-64

---

## திருக்கேதீச்சரத் திருப்பணி

சுவாமிகோயிற்றிருப்பணிக்கு ரூபா 150000 தேவை

———0———

இச்சபையினது கூட்டம் சென்ற வாரம் தெரிவித்த வண்ணம் 24—2—64 பிற்பகல் 5 மணியளவில் திருப்பணிச் சபைத் தலைவர். சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்து பல அன்பர்கள் சமுகமளித்தார்கள். தலைவரவர்கள் இதுவரையும் கோயிலில் நடைபெற்ற ஆக்க வேலைகளைப்பற்றியும் இனிமேல் நடைபெறவேண்டிய திருத்தங்களைப்பற்றியும் சொற்பொழிவாற்றினார்.

சுவாமி கோயிற்றிருப்பணியைப் பூர்த்திசெய்து கும்பாபிஷேகத்தை இயன்றளவு விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. குறித்த சுவாமி கோயிற் திருப்பணியைப் பூர்த்திசெய்ய ரூபா 1,50,000 தேவையெனவும் தெரிவிக்கப்பட்டது. இத்தொகையைச் சேர்ப்பதற்கு ஒரு உபசபை நியமிக்கப்பட்டது. இவ்வுபசபை அங்கத்தவர்கள் கிராமந்தோறும் சென்று வீடுவீடாகப் பணந்திரட்ட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. திரு ச அம்பிகைபாகன் அவர்கள் ஒரு அன்பர் சுவாமி கோயிற்றிருப்பணிக்கு ரூபா 10,000 வழங்க வாக்களித்துள்ளார் எனவும் இக்கூட்டததில்தெரிவித்தார்.

x x x

### அநுராதபுரப் புதிய கதிரேசன் கோயில்

அநுராதபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய கதிரேசன் கோயில் திருப்பணி பூர்த்தியாகி, வருகிற சித்திரை மாதம் ஒரு சுபதினத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும், இவ்வைபவத்துக்குப் பெருந் தொகைப் பணம் தேவைப்படுகின்றதெனக் கோயில் பரிபாலன சபைத் தலைவர் தெரிவிக்கின்றார்.

---

## சைவப் பிரசங்கம்

அராலி தெற்கில், நிகழும் சோபகிருது ௵ மாசிமீ 7உ (29-2-64) சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் செம்பிகோட்டம் வைரவசுவாமி கோவிலில் "மகாசிவராத்திரி விரதமும், அதை அநுட்டிக்க வேண்டிய அவசியமும்" என்னும் பொருள் பற்றி உடுவில் சிவஸ்ரீ ஐ. முத்துச்சுவாமிக் குருக்களவர்களாலும், "தீயவர்களுடைய நினைவுகள் நல்லோர்க்குத் தொற்றுவதால் நல்லோருக்குப்பாவம் தொற்றும்" என்னும் பொருள்பற்றி அராலி தெற்கு சைவசமய இலவச பிரசாரகர் திரு. வே. கந்தையா அவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறும்.

ஷை தொண்டில் விருப்பமுடைய சைவாபிமானிகள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

—0—

---

## உள்ளங் கவர் கள்வன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தமை அப்பயனெல்லாம் அடைவித்தற்கேயாதலின், அப்பயனை அறிந்து மகிழ்ந்த அக்குழந்தை, அம்மகிழ்ச்சியின் நிமித்தம் உணர்விழந்து "என் உள்ளங் கவர் கள்வன் ... ... இவன் அன்றே!" இவன் நன்றே உள்ளங் கவர் கள்வன் என்றுவாயாரவாழ்த்தியது.

"நான் அறியாமல் • களவாக உனக்குப் பால் தந்தவர் யார்" என்று அப்பா கேட்கத் திருஞான சம்பந்தப்பிள்ளை சொல்லுகிறது:-

"அப்பா! எனக்குப் பால் தந்தவர் பெண்; அந்தப் பெண்ணோடு ஒருவன் வந்தான், அவனுக்கும் அவளுக்கும் எந்த வேறுபாட்டையும் என்னல் அறிய முடியவில்லை அவன்தான் அவள்; அவள்தான் அவன். அவனிடத்திலேயே அவளும் இருந்தாள். இருவரும் ஓர் உருவினர்.

என்ன ஆச்சரியம்! அந்த உருவின் இடப்பக்கத்துக் காதில் தோடு இருந்தது; வலப்பக்கத்துக்காதில் சங்க வெண்குழை இருந்தது. ஆகவே, அவன் ஒரு தோடுடைய செவியன் ஆவன்; அவன் விடை ஏறி வந்தான்; ஓர் தூவெண்மதி சூடி வந்தான்; காடுடைய சுடலைப்பொடி பூசி வந்தான்; வந்து, அந்தத் தோடு உடையானைக் கொண்டு எனக்கு இனிய மெய்ஞ்ஞானப்பாலை ஊட்டுவித்தான். அம்மட்டோ! அவன் என்னைப் பார்த்த பார்வை — அருள்சொட்டுகிற பார்வை; அழகான பார்வை; அது என்னைக் கவர்ந்தது — என்னுள்ளத்தைக் கவர்ந்தது; ஆதலால் அவன் என் உள்ளங்கவர் கள்வனய் விட்டான்; அப்பா! நான் அவனல் கவரப்பட்ட பொருள்; நான் இங்கிருந்தும், இல்லாதவனய் அவனிடமே இருக்கிறேன்; இருந்து பேரின்பமடைகிறேன். அவன் செய்த களவு நல்ல களவு; அது வாழ்க."

இங்ஙனமே இவ்வுலகில் நல்லமுறையிலே உள்ளங்கவர் கள்வர்களும் கவரவிடுபவர்களும் வாழ்வார்களாக.

— —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

### 75-வது வருடாந்தக் கூட்டம்

ஷை சபையின் 75-வது வருடாந்தக் கூட்டம் நிகழும் சோபகிருது௵ மாசி௴ ௨௫-ந்உ (8-3-64) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சிகள்:

1 தேவாரம்
2 சென்ற வருடாந்தக்கூட்ட வரலாறு
3 செயற்குழுவின் வருடாந்த அறிக்கை
4 சைவபரிபாலன சபையினதும் சைவப்பிரகாச அச்சகத்தினதும் பரிசோதிக்கப்பெற்ற 1962—1963-ம் ஆண்டுக் கணக்குகள்
5 சபை யாப்பு விதானங்கள் 2, 3, 4-ம் பந்திகளில் சில திருத்தங்கள் செய்தல்.
6 'C' பிரிவுக்கு நிருவாகசபை உறுப்பினரைத் தெரிவுசெய்தல்
7 புதுவருடத்துக்குரிய சபை உத்தியோகத்தரைத் தெரிவுசெய்தல்
8 பிரேரணைகள்
9 வேறு விஷயம்
10 நன்றியுரை
11 தேவாரம்.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 21-2-64.

ஆ. தனபாலசிங்கம்,
கௌரவ செயலாளர்.

முக்கிய கவனிப்பு:

1 வருடாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகள் 5-3-64க்கு முன் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.
2 அங்கத்துவ சந்தாப்பணம் பாக்கியின்றிக் கட்டத்தவறுவோர் வாக்குரிமையை இழப்பர். ஆகவே அங்கத்தவர் யாவரும கூட்டத்துக்கு முன் சந்தாவை அனுப்பிவைக்குமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.
3 கணக்குச் சம்பந்தமான வினாக்கள் இருப்பின் 5-3-64க்கு முன் தனாதிகாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

### இலங்கை வானொலியில் திருவள்ளுவர் திருநாள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ச்சி வானொலி நிலையம் 29-2-64 காலை 7-30 முதல் 8 வரையும் பின்னர் மாலை கிராமநிகழ்ச்சியிலும், திருக்குறள் சம்பந்தமான நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும்.

சென்னையிலுள்ள மயிலாப்பூரிலிருக்கும் திருவள்ளுவர் ஆலயத்தில் இத்தினத்தில் வள்ளுவருக்கு விசேடபூசையும் ஆராதனைகளும் நடக்கும்.

### திருக்குறள்மகாநாடு

1-ம் பக்கத் தொடர்ச்சி

பெறும் விழாவில், திருவாளர்கள்: இ. அம்பிகைபாகன், சி. ஆறுமுகம், சி. கதிரேசர்பிள்ளை, இ. நாகராசன், க. சிவசம்பு, க. சச்சிதானந்தம், நா. ஆறுமுகம் ஆகியோரின் கவியரங்கமும், திருவாளர்கள் பொன முத்துக்குமாரு, க. கொ. சோமசுந்தரம் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் உரையரங்கமும், திரு. ந. சண்முகரத்தினம் குழுவினர் அளிக்கும் இசையரங்கும் நடைபெறும்.

இரண்டாம்நாள் திரு. க. பிஹரன் அவர்களின் தலைமையில் நடைபெறும் விழாவில், திருவாளர்கள் ச. பொன்னுத்துரை நா. சுப்பரதசுந்தரனார், க. நாகலிங்கம் மு. கந்தையா, வ. நடராசா, ச. கந்தசாமி ஆகியோரின் கவியரங்கமும், அளவெட்டி அருணாசல வித்தியாசாலை மாணவர்களின் வில்லுப் பாட்டும் இடம்பெறும்.


உத்தரவாதம்! உயரிய வேலை! நீடிய உழைப்பு!
சிறந்த அழகு! இவைகள் அனைத்தும் அமையப்பெற்ற
பவுண், வைர ஆபரணங்களுக்கு
சிறந்த இடம்:

# எஸ். கே. எஸ்.
## 'தங்க மாளிகை'

கன்னாதிட்டி, :: யாழ்ப்பாணம்.
போன்: 281. தந்தி: ஜுவல்லர்ஸ்.



## G. C. E. 1965 — 67 இலக்கியம்
## பாரதி பாடல் தொகுப்பு நூல்

—————:0:—————

1965 — 67-ம் ஆண்டுக்குரிய G. C. E. சாதாரண பரீட்சை செய்யுளிலக்கியமாகிய சுப்பிரமணிய பாரதியார் பாடல்களின் தொகுப்பு நூல் வித்துவான் ந. சுப்பையா பிள்ளையவர்களுடைய விரிவுரையுடன் கீழ்க்கண்ட விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 85.

தொகையாக வாங்கும் வியாபாரிகளுக்கும், ஆசிரியர்களுக்கும 20% கழிவு கொடுக்கப்படும்.

மனேஜர்,
450, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



## எஃப். ஜீவாஜி சகோதரர்கள்
### மொத்த, சில்லறை வியாபாரிகள்

அச்சுக்கந்தோர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தேவையான காகிதம், அச்சடிக்கும் மைகள், பாடசாலை உபகரணங்கள், பாண்சாலைகளுக்கான 'கேக்' பெட்டிகள், கடுதாசிப்பைகள், வியாபாரிகளுக்கான என்வலப்புகள், நூல், மை, கொப்பி, பென்சில், பேனை, பலவித மட்டைகள், சோடனைக்கடுதாசிகள் என்பன எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எஃப் ஜீவாஜி சகோதரர்கள்,
ஜுபிலி பஜார், இலக்கம் 9, (ராணி சினிமாவுக்கருகில்)
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம.

தலைமைக்காரியாலயம்:
ஜீவாஜி சகோதரர்கள்,
50, புதிய சோனகதெரு கொழும்பு-12

கிளை:
இன்டிப்பென்டன் ரேடிங்கொம்பனி,
51A, 1-ம் குறுக்குத்தெரு
கொழும்பு – 11

தொழிற்சாலை: 146, புதிய சோனகத்தெரு, கொழும்பு 12


### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

இல, TR 56

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் TR 56 இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக்காணிகளை 1964௵ பங்குனி௴ 25௳ புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன டாப்பு:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக்கோயிற்பற்று பத்தமேனி இறை "சாத்தா வொல்லை" நில. பர. $12\frac{1}{4}$ + $\frac{1}{2}$ கிணற்றில் பங்கும் தூர்வையும், வளி வாய்க்கால் பாவிப்புரித்தும். இதற்கு எல்லை கிழக்கு மாட்டின் பெண் மேரிப்பிள்ளையின் ஆதனம். வடக்கு குஞ்சர் சுப்புரும மறுபேரும். மேற்கு ஆள்வார் கற்பகத்தின் ஆதனம் தெற்கு M. வைத்தியாப்பிள்ளையின் ஆதனம். இதடங்கலும்.

2. ஷை இறை "சாத்தா வொல்லை" நிலப்பரப்பு 16 இதற்கு கிழக்கு எல்லைக் காணியில் இருக்கும கிணற்றுப்பங்கும், வளி வாய்க்கால் பாவிப்புரித்தும். இதற்கு எல்லை கிழக்கு கயித்தாம பிள்ளை பெண் குசைப்பிள்ளையின் ஆதனம், வடக்கு குஞ்சர் சுப்பரும் மறுபேரின ஆதனமும். மேற்கு ஆள்வார் பெண் கற்பகத்தின் ஆதனம். தெற்கு சந்தயாப்பிள்ளை பொன்னையாவின ஆதனம், இதடங்கலும்.

3. ஷை இறை "பெற்றுன் புளியடி" நிலப்பரப்பு $37\frac{1}{2}$-ல் சொரியலாய் அரைவாசியும் அதைச்சேர்ந்தவைகளும், இதற்கு எல்லை கிழக்கு சந்தயாப்பிள்ளை தம்பிமுத்துவின் ஆதனம். வடக்கு மூத்துக்குமாரு பெண் சின்னப்பிள்ளையின் ஆதனம், மேற்கு பிலிகஸ் சிங்கராசாவின் ஆதனம், தெற்கு வயிரவன் பெண் வள்ளியின் ஆதனம், இதடங்கலும்.

4. ஷை இறை "சாத்தா வொல்லை" நிலப்பரப்பு 11 9/16 இதற்கு எல்லை கிழக்குக்கு பொன்னம்பலம் பெண் பறுபதத்தின் ஆதனம் வடக்கு மண்தெரு, மேற்கு கணபதியர் வயிரமுத்துவின் ஆதனம், தெற்கு சந்தியாப்பிள்ளை தம்பிமுத்துவின் ஆதனம். இதடங்கலும்,

செ. விசாகரெத்தினம்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
No. 133 பருத்தித்துறை றோட்டு
நல்லூர், யாழ்ப்பாணம். 25-2-64

M 298 28-2-64.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: TR 56.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் TR. 56 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக் காணிகளை 1964௵ பங்குனி௴ 28௳ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

ஆதன டாப்பு

1 வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோவிற்பற்று பத்தமேனி இறை 'அக்கிலியப் புலம்' நிலப்பரப்பு 4-ம் குளி 6-ம் இதற்கு எல்லை கிழக்கு சந்தயாப்பிள்ளை தம்பிமுத்துவின் ஆதனம், வடக்கு வைத்தியபிள்ளை பெண் குசைப்பிள்ளையின் ஆதனம், மேற்கு நாராயணர் ஆசைப்பிள்ளையின் உரிமைக்காறருக்குரிய ஆதனம், தெற்கு அச்சுவேலி கிராமஎல்லை இதடங்கலும்

2. ஷை இறை "கருவணன்சிமாவும் பனைய சீமாவும்" பரநில இலா $5\frac{1}{4}$-ல் எல்லை கிழக்கு சுப்பர் கைம்பெண் கதிராசியின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு ஆழ்வார் கைம்பெண் கற்பகத்தின் ஆதனம், தெற்கு பொன்னம்பலம் கைம்பெண் பார்வதிப்பிள்ளையின் ஆதனம் இதடங்கலும்.

3. ஷை இறை 'பாவியோடைத் தோட்டம்' பரநில இலா 3 (மூன்று) இதற்கு எல்லை கிழக்கு வயிரவன் கைம்பெண் வள்ளியின் உரிமைக்காறருக்குரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு தர்பையா பெண் தங்கமுத்துவின் ஆதனம், தெற்கு ஆறுமுகம் வயிரவநாதரின ஆதனம் இதடங்கலும். மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்பங்கும்.

செ. விசாகரெத்தினம்,
கொமிசனரும்,விலைமதிப்பாளரும்,
133 பருத்தித்துறை றோட்டு 113,
நல்லூர், யாழ்ப்பாணம், 25-2-64,


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 28-2-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோடு

இல. MB. 5435,

புங்குடுதீவு மேற்கு இராமனாதர் மகாலிங்கம். —வழக்காளி

1, புங்குடுதீவு கிழக்கு, மூத்தக்குமாரு குமாரசாமி அல்லது குமாருவும் பெண்
ஷை மீனாட்சியும்
ஷை நல்லதம்பி துரைசாமியும்.
— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் MB. 5435 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு காணிகளை 1964-ம் ஆண்டு சித்திரைமாதம் 4-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

1-ம், 2-ம் எதிரிகளிடமிருந்து அறவுபண்ண வேண்டியதீர்வைத் தொகை ரூபா 3391 00 இதில் ரூபா 2000/-க்கு 20-2-63 தொடக்கம் 30-7-63 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீதமான வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் கொடுக்கும் வரைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 125/- கொடுக்குமதியில் ரூபா 250/- கொடுபட்டது

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவு கோயிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை கலியாணன் தோட்டம் நிலப்பரப்பு 13 குளி 7-ம் கல்வீடும் கிணறும் செய்பயிர்களும், எல்லை கிழக்கு கந்தையா ஐயாத்துரைக்கும மூத்துக்குமாரு பெண் இராசம்மாவுக்குமுரிய ஆதனங்கள். வடக்கு றோட்டு, மேற்கு குமாரவேலு சண்முகநாதனுக்கும் சகோதரங்களுக்குமுரிய ஆதனம். தெற்கு மூத்ததம்பி பசுபதிப்பிள்ளையின் உருமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதடங்கலும். யாழ்ப்பாணக் காணிக்கந்தோரில் C 245/153-ல் பதியப்பட்டது.

2. ஷை புங்குடுதீவு மேற்கிறை கொல்லன்புலம் நெற்பரப்பு 20, எல்லை கிழக்கு இராமு கந்தையா வினதனம, வடக்கு கந்தசாமி கோவிலுக்கும் சினிவாசகஐயர் சாப்பசிவக் குருக்களுக்கு முரிய ஆதனம், மேற்கு மூத்துக்குமாரு பொன்னையாவினதனம், தெற்கு சுப்பையா பெண் அன்னப்பிள்ளைக்கும பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி C 245/154 ல் பதியப்பட்டது.

க. சுப்பிரமணியம்
கொம்மிஷனர்.
யாழ்ப்பாணம 24-ம நம்பர்,
1-ம குறுக்குத்தெரு
28-1-64.